# கடற்கரை கவியரங்கு – 637

**நாள்: 05-05-2024**

# அறிவே நிறையாம்!

காலத்தின் சுவடுகளில் கற்பனைக்கு ஏது எல்லை!
கோலமாய் காண்பவற்றுள் வடிவத்தை மனம்தேட,
ஆலமாய் விரிந்த அறிவு ஆற்றலில் நிறம் தேடும்!
பாலமாய் வாழ்வியலின் பக்குவத்தை நாம் நாட,

சீலமாய் வாழ்வின் நிலையே சிந்திக்கத் தூண்டும்!
சீண்டும் குளிரைப்போல் சிந்தனைப் பிறழ்ந்து எழும்!
ஆண்டதும் அறிந்ததும் அறிவில் நிறைந்ததும்,
தாண்டுமோர் எல்லையை தானே வகுத்திடவும்,

மீண்டதாய் சிலநினைவு மேதினியில் எழுந்துவிட,
மூண்டிடும் அறிவின்புலம் முகவரியைத் தானெழுதும்!
காண்பவற்றுள் காட்சியினால் மனமும் தெளியும்!
தோண்டத் துலங்குமாம் அறிவே வாழ்வின் எல்லை!

தோளுயரத் துணையாகும் நல்அறிவின் பயனே!
வாளுயர்ந்து வீரத்தில் நிலையை சொன்னாலும்,
தாளசைந்து நெற்கதிரின் அழகைத் தந்தாலும்,
கோளெழுந்து வானத்தின் குறிப்பைத் தந்தாலும்,

காடுயர்ந்து மழைமுகிலை காத்து நின்றாலும்,
தேடுகின்ற அனைத்திலுமே இன்பத்தை காண,
நாடுகின்றே அறிவேதான் நற்பயனாகுமன்றோ!
கூடுகின்ற உறவுக்குள் அறிவின்புலமே வெல்லும்!

- **கவிவளவன்.** ஆகிய **கு.ப. அசோகன்.**
**05-05-2024 (மதியம்:02-45)**